
# எழுத்தாணி

பல்சுவை இதழ்

ஜூலை இதழ் 10 2013







ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# உண்மைச் செய்திகளுக்கான இணையத் தளம்

தொடர்புகளுக்கு: oodaham@gmail.com

www.oodaham.com



oodaham.com
ஊடகம்.கொம்

# எழுத்தாணி

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"


ஆசிரியர் குழு:

எஸ். உமாசுதன்
சி. திவாகரன்
வ. ரஜிந்தன்
க. சக்திவேல்
ப. பார்த்தீபன்

நிர்வாக ஆசிரியர்:

தே. தேவானந்

ஆலோசனை,
வழிகாட்டல்:

ஆ. சபேஸ்வரன்

வெளியீடு:

ஊடக வளங்கள்
மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்



தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 0212229873
Email: directormrtc@gmail.com


## உள்ளே


| | |
|---|---|
| மருத்துவச் சாண்றிதழ் 500 ரூபாவுக்கு இரண்டு!! | 02 |
| வல்லிபுர ஆழ்வார் ஆலயம் | 04 |
| அருகிப்போகும் மட்பாண்டக் கைத்தொழில் | 06 |
| மெய்ஞானமும் விஞ்ஞானமும் | 08 |
| கந்தையானாலும் காசாக்கிக் காட்டு | 10 |
| பாதை | 11 |
| சமூக இசைவில்லாத வாழ்வு வாழ்வன்று | 12 |
| தீராத தலைவலியாய் தீயணைப்பு சேவை | 14 |
| அளவெட்டி தந்த அற்புதக் கலைஞர் | 16 |
| வெற்றிக்கான படிக்கற்களாக தோல்விகளை மாற்றியவர் | 18 |
| ஒரே ஒரு ஒருக்குள்ளே ஒரே ஒரு ஐயா | 20 |
| மூலிகைச் செடிகளின் முக்கயத்தை உணரச்செய்த கண்காட்சி | 22 |
| ஆவுரோஞ்சிக்கல் | 24 |
| சுவையின் மறுபெயர் பருத்தித்துறை வடை | 26 |
| மணற்காடு | 28 |




# மருத்துவச் சாண்றிதழ்! 500 ரூபாவுக்கு இரண்டு!!



**வைத்தியர்களின் வியாபாரத்துக்கு இப்போது முற்றுப்புள்ளி.**

500 ரூபாவுக்கு இரண்டு மருத்துவச் சான்றிதழ்கள். ஒன்றெடுத்தால் ஒன்று இலவசம் என்ற அளவுக்கு நடைபாதை வியாபாரம் போன்று ஆகியிருந்தது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு மருத்துவச் சாண்றிதழ் பெறும் நடைமுறை.

வீதிக்கு வீதி விளம்பரப் பலகைகள் வைத்து பணத்துக்கு மருத்துவச் சாண்றிதழ்கள் விற்கப்பட்டு வந்தன.



ஒருவர் எப்படியாக குறைபாடு இருந்பவரானாலும் சரி அதைப்பற்றிக் கவலையில்லை. 500 ரூபா கொடுத்துவிட்டால் மருத்துவச் சாண்றிதழ் தயார். மருத்துவப் பரிசோதனை என்பது பெரும்பாலும் நடப்பதே இல்லை.

சமூகப் பொறுப்பற்ற மருத்துவர்களின் இத்தகைய வியாபாரத்துக்கு இப்போது வைக்கப்பட்டிருக்கிறது முற்றுப்புள்ளி.

ஆம்! சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு சமர்ப்பிக்க வேண்டிய மருத்துவச் சாண்றிதழ் பெறும் நடைமுறை இப்போது இறுக்கமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இங்கு உள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளினாலும், தனியார் வைத்தியசாலைகளிலுனாலும் வழங்கப்பட்டு வரும் மருத்துவ சான்றிதழகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக யாழ். குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பரீட்சையினை எழுதுவதற்கு தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது அனுமதிப் பரீட்சையினை மேற்கொள்ளும் சாரதிகள் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தில் சென்று மருத்துவச்சாண்றிதழினைப் பெற்ற பின்னர் சாரதி பாடசாலைகளினூடாக




பரீட்சைக்கு மாவட்ட செயலகத்தில் தோற்ற முடியும்.

யாழ். குடாநாட்டிலும் ஏனைய மாவட்டங்களிலும் தொடர்ந்து அதிக விபத்துக்கள் நிகழ்ந்து வருகின்றன. இதனை பொலிஸ் விசாரணைகள் மூலமும் வைத்தியசாலை அறிக்கைகள் மூலமும் உறுதிப்படுத்த முடிகின்றது. இதற்கான காரணிகளில் ஒன்றாக விளங்குவது சாரதிகள் தவறான வழியில் பெற்றுக் கொண்ட மருத்தவ சான்றிதழ்களே என குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

புதிய நடைமுறை மூலம் போலி மருத்துவச் சாண்றிதழை இனிப் பெற்றுக்கொள்ள முடியாது.

விபத்துக்களைக் குறைக்க இந்த நடைமுறை சிறிதளவேனும் கைகொடுக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனாலும் இது மட்டும் போதாது. பணத்தைக் கொடுத்தால் மட்டும் போதும் பத்தே நாட்களில் எவ்வகையான சாரதி அனுமதிப் பத்திரமும் வீடு வந்து சேரும் வகையிலான சட்டவிரோத நடைமுறைகள் இன்னமும் உள்ளன. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும் போதுதான் விபத்துக்களை பெரியளவில் தடுக்க முடியும்.

- சக்திவேல் -



# வல்லிபுர ஆழ்வார் ஆலயம்


வல்லிபுர ஆழ்வார் கோயில், இலங்கையின் வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்லிபுரம் எனும் ஊரில் உள்ள பிரபலமான விஷ்ணு ஆலயம் ஆகும். இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக விஷ்ணுவின் சுதர்சனச் சக்கரம் உள்ளது.

வல்லிபுர ஆழ்வார் கோவில் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. துன்னாலை, புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் இக்கோவில் அமைந்துள்ளது. பருத்தித்துறையில் இருந்து கிட்டத்தட்ட 4 மைல் தொலைவில் இக்கோவில் உள்ளது. ஆர்ப்பரிக்கும் கடலோசை, வெள்ளை மணற்பரப்பு, பசுமையைக் கொடுக்கும் விருட்சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் ஒரு கோவிலாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் விளங்குகிறது. வரலாற்றுப் பெருமை கொண்ட இவ்வாலயம் மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப்பெற்ற புராதன தலமாகும்.

### வல்லிபுரத்தின் காரணப்பெயர்

வல்லிபுரம் என்ற பெயர் இக்கிராமத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நாகர்களுடைய ஆட்சி கி.பி. 303 இலும் லம்பகர்ணர் ஆட்சி 556 இலும் முடிவுக்கு வந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இப்பகுதிகளில் குடியேறிய படை வீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியபோது வட மறவர்கள் ஆட்சி செய்த இடம் வடமராட்சி எனப்பட்டது. நூலாசிரியரான ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் கருத்துப்படி தொண்டை நாட்டின் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும் அவர்கள் குடியேறிய பிரதேசத்





திற்கு வடமராட்சி என்று பெயரிட்டதாகவும் தெரியவருகிறது. அக்குழுவின் தலைவனாக வல்லியத்தேவன் என்பவன் இருந்ததாகவும் அவனின் பெயரைக் குறிக்கும் முகமாக இக்கிராமத்திற்கு வல்லிபுரம் என்று பெயரிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வல்லி என்ற சொல்லுக்கு ஆயர்பாடி என்ற ஒரு கருத்தும் புரம் என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர்பாடிக் கோவிலாகவும் கண்ணன் வளர்த்த இடமாகவும் கொள்ளப்படுகிறது.

**ஆலய வரலாறு**

பருத்தித்துறை, புலோலியில் "வராத்துப் பழை" என்கின்ற சிறிய கிராமம் உண்டு. இக்கிராமத்தில் கண்ணனையே அனுதினம் பூஜித்து வந்தார் வல்லிநாச்சியார் எனும் மாதரசியாவார்.

இவருக்கு குழந்தைச் செல்வம் இன்மையால் ஸ்ரீ நாராயண மூர்த்தியிடம் தமது குறையை நீங்க வேண்டுமென அழுது வேண்டினார். கேட்டவர்க்கு வரம் தரும் வள்ளல் மாயவன், அவர் கனவில் தோன்றி "நீ, உடனே கற்கோவளம் கடற்கரைக்கு வா" எனக் கூறி அருள, அம்மையாரும் அவ்வண்ணம் அங்கே சென்றார்.

என்னே! ஆச்சரியம், கடலில் அலை நடுவே மச்ச உருவில் (மீன்) துள்ளிவிளையாடிய கண்ணன், பின்னர் குழந்தையாகி, அம்மையாரின் மடியில் விழுந்து தவழ்ந்து நின்றார். சுற்றி நின்ற மக்கள் பரவச நிலை எய்தினர். அப்போதுதான் ஒரு புதுமை நிகழ்ந்தது. கண்ணன் திடீரென ஸ்ரீ சக்கர வடிவம் கொண்டான்.

பின்னர் அனைவருமே வல்லிநாச்சியாரின் கருத்திற்கேற்ப ஸ்ரீ சக்கரத்தைப் பல்லக்கில் ஏற்றி ஊருக்குக் கொண்டு செல்லலாயினர். வழியில் தாக சாந்திக்கு என அடியார்கள் பல்லக்கை இறக்கி நீர் அருந்தி முடிந்ததும், மீண்டும் பல்லக்



கைத் தூக்க முயற்சி செய்தனர். ஆனால் முடியவில்லை. ஸ்ரீ சக்கரம் அங்கேயே நிலையாய் இருந்து விட்டது. அந்த இடமே தற்போது கோயில் கொண்ட ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருக் கோவிலும் ஆகும்.

இன்று காண்போர் வியக்கும் வண்ணம் மிகப்பெரிய இராஜகோபுரம், மூன்று பெரும் வீதிகளுடனும், மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்ட சிறப்பினை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் கொண்டுள்ளமை கண்ணனின் அருள் மழையில் நனைந்து, நினைந்துருகும் அடியவர்களின் பக்தியினாலேயோகும்.

வல்லிபுர ஆழ்வார் தோன்றி காட்சி கொடுத்தமையினால் கோவில் அருகே சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தே உள்ள சமுத்திரத்தில் தான் சமுத்திர தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய தினம் திரளும் பக்தர்கள் தொகை, வேறெங்கும் காணாத வியக்க வைக்கும் காட்சியேயாகும்.

புலோலியூர் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் அவர்கள், கோவிலைச் சூழவுள்ள மணல் மேடுகள், அருகேயுள்ள பழைமை வாய்ந்த இடிபாடுகளுடன் கூடிய கற்கள், கண்டு எடுத்த சான்றுப் பொருட்களைக் கொண்டு மணிமேகலையில் கூறப்பட்ட "மணிபல்லவம்" எனும் இடம் இதுவாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கற்கோவளம் கடற்கரையோரத்தினை அண்டிய பகுதியே சிங்கை நகர் எனும் இராஜதானி அமைந்திருந்ததாக வரலாற்றியலாளர்களும், தமது ஆய்வு மூலம் சொல்கின்றனர்.

# அருகிப் போகும் மட்பாண்டக் கைத்தொழில்



-சி. திவாகரன்-

யாழ்ப்பாணத்தில் மட்பாண்டக் கைத்தொழில் நீண்ட நெடிய வரலாறு கொண்டது. கலையாகவும் தொழிலாகவும் பலர் பரம்பரை பரம்பரையாகவே இத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இன்றோ அலுமினியம், சில்வர் பாத்திரங்கள் வீடுகளை ஆக்கிரமித்துக்கொள்ள மட்பாண்டங்கள் சமையலறையில் இருந்து பெரும்பாலும் மறைந்துவிட்டன. அவற்றைப் பெருமளவானோர் மறந்தும் விட்டனர்.

மட்பாண்டங்களுக்கு கிராக்கி இல்லாததால் பலர் இத்தொழிலை விட்டு ஒதுங்கி வேறு தொழில்களை நாடிச் சென்றுவிட்டனர். எஞ்சியிருந்த கொஞ்சப்பேரும் மட்பாண்டத் தொழிலுக்குரிய மூலப் பொருட்களை பெறமுடியாத நிலை, அவற்றைப் பெற்றுக்கொள்ளதில் ஏற்படும் அதிக செலவீனங்களை ஈடுசெய்து இலாபத்தைப் பெறமுடியாமை போன்ற காரணங்களால் ஒதுங்கிவிட்டனர்.

இன்றும் ஆங்காங்கு ஒரு சில மட்பாண்டக் கைத்தொழிற்சாலைகளே யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகின்றன.

எஞ்சியுள்ள சிலவற்றில் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள சங்கானை மட்பாண்டக் கைத்தொழில் முக்கியமானது.


1967ஆம் ஆண்டு இங்கு மட்பாண்ட கைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலையை சூழ உள்ள சிலர் பரம்பரையாக இத் தொழிலை செய்து வநதனர்.

1980 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒட்டிசுட்டானில் இருந்து மண்பாண்டங்களுக்குத் தேவையான மூலப்பொருளான களிமண்ணை யாழ்ப்பாணத்துக்கு எடுத்தவருவருவதில் சிக்கல் ஏற்பட்டது. விறகுக்கும் கடும் சிராக்கி ஏற்பட்டதுடன் விலையும் மிக அதிகமானது.

மட்பாண்டம் ஒன்றை செய்து முடிக்க ஆகும் தொகை அதிகம் அதனால் பொருட்களையும் அதிக விலைக்கே விற்பனை செய்ய வேண்டியுள்ளது என்கிறார் இத்தொழிற்சாலையின் போதனாசிரியர் அப்பாத்துரை திருச்செல்வம்.

உதாரணத்துக்கு நாங்கள் இங்கே ஒரு மட்பாண்டத்தைச் செய்ய அண்ணளவாக 300 செல





வாகின்றது என்றால் ஒட்டுசுட்டா னில் இருந்து அதே மட்பாண்டத்தை செய்து வருபவர்கள் அதனை 150 ரூபாவுக்கு விற்பனை செய்கின்ற னர்.

ஒட்டுசுட்டானில் மட்பாண் டம் செய்வதற்கான களிமண் இலவ சமாகக் கிடைக்கிறது. விறகும் அங்கு தாராளம். எனவே அங்கி ருந்து இப்பொருட்களைச் செய்வோர் குறைந்த விலையில் அவற்றை விற்க முடிகிறது. ஆனால் எம்மால் முடியாது என்கி றார் அவர்.

இத் தொழிற்சாலையில் மண்ணால் பாவ னைப் பொருட்களும் அலங்காரப் பொருட்களும் செய் யும் கலையை மாணவிகளிற்கு கற்றுக்கொடுக்கின்ற னர். ஆறு மாத காலப்பயிற்சி அவர்களிற்கு வழங்கப் படுகின்றது. பயிற்சியின் போது ஊக்குவிப்பு பணமாக ஒரு நாளிற்கு ரூபா 200 வழங்கப்படுகின்றது.

இத் தொழிற்சாலைக்கு தேவையான களி மண் சண்டிலிப்பாய் குளத்திலிருந்து பெறப்படுகின் றது. ஒரு டிறைக்டரில் பெறப்பட்ட களிமண் 4 மாத காலங்களிற்கு போதுமானதாக உள்ளது. குளக் களி மண் பசைத்தன்மையுடன் காணப்படுவதால் அவ் மண்ணே பொருட்கள் செய்வதற்கு தகுந்த மண் ணாக தேர்ந்து எடுக்கப்படுகின்றது எனவும் போதனா சிரியர் அப்பாத்துரை திருச்செல்வம் கூறுகிறார்.

இத் தொழிற்சாலையை மேம்படுத்துவதற் காக சிறு கைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மின்னால் சுழலும் சுழல் சக்கரத்தை வழங்கியுள்ளார். அத் தோடு பிசுங்கான் பொருட்கள் செய்வதற்குரிய இயந் திரங்களையும் உபகரணங்களையும் வழங்குவதாக கூறியுள்ளார்.

இதன் மூலம் எதிரகாலத்தில் இக் கைத் தொழிற்சாலை பல வழிகளிலும் முன்னேறி வரு மென அத்தொழிற்சாலையின் போதனாசிரியர் அப் பாத்துரை திருச்செல்வம் கூறுகின்றார்.



# மெய்ஞானமும் விஞ்ஞானமும்

"உலகம் நமக்குக் கொடுக்கக்கூடியதை விஞ்ஞானம் கண்டுபிடித்துக் காட்டுகிறது. உலகத்திற்கு நாம் கொடுக்கக் கூடியதை மெய்ஞானம் நமக்கு உணர்த்தி அது நமக்குள்ளேயே இருப்பதை எடுத்துக்காட்டுகிறது" ஆம்! விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒரு சங்கிலியின் இரு முனைகள்.

அவை இரண்டும் இணையும்போதுதான் அவை பயன்படும். பகுத்தறிவும் ஆன்மீக உணர்வும் இணையும் போதுதான் மனிதனின் பார்வை முழுமை அடைகிறது. அவை அவனுக்கு இரண்டு கண்களாக பயன்படுகின்றன என்றார் பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

மேலும் விஞ்ஞானம் மனிதனை உடல் திறனும் அறிவுத்திறனும் கொண்டவனாக உருவாக்குகிறது. மெய்ஞ்ஞானம் மனிதனை கூர்மையும் எண்ணச் செறிவும் ஊன்றிய கருத்துத்தும் கொண்டவனாக்கி முழுமை பெறச் செய்கின்றது. அதனுடைய சிந்தனை செயல் இரண்டுமே புனிதம் பெறும். ஒன்றைப் பார்ப்பது விஞ்ஞானம் பலவற்றைத் தொகுத்துக் காண்பது மெய்ஞ்ஞானம்.

அதாவது ஒன்றைப் பலவாறாக காண்பது விஞ்ஞானம். பலவற்றிலும் ஒன்றைக் காண்பது மெய்ஞ்ஞானம். மனிதன் தன்னுடைய வாழ்க்கையையும், தன்னைச் சுற்றி இருப்பவை யாவும் எப்படி? எது? என்று கேட்டுத் தெரிந்து கொள்ள விஞ்ஞானம் தேவைப்பட்டது. ஏன்? எதுவரை? எங்கே? என்று புரிந்துகொள்ள மெய்ஞ்ஞானம் தேவைப்பட்டது.
மனிதன் ஆரம்ப காலத்தில் விலங்குகளைப் போலவே இருந்தான். அவனுடைய பசி, தாகம், வேட்கை போன்ற அடிப்படையில் மட்டும் தான் அமைந்திருந்தன. அவன் ஓர் உயர்ந்த மிருகமாகத்தான் இருந்தான். அறிவுபூர்வமாகக் சிந்திக்க தலைப்பட்ட அவன் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறினான் என்று சொல்கிறார் விஞ்ஞானி டார்வின்.

நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? என்று விஞ்ானிகளால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் அன்றோ எமது தத்துவஞானிகள் தேடிவைத்த மெஞ்ஞானம் தான் இதற்கு பதில் சொல்கிறது. நோபல் பரிசு பெற்ற மிலிக்கண் என்ற விஞ்ஞானி மனிதனுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைபவை விஞ்ஞானம், மெஞ்ஞானம் ஆகிய இரண்டு தூண்கள் என்கிறார்.
நமது வேதங்களும்

உபநிடதங்களும் ஆன்மீகத்திற்கு தேவையான அறிவைத்தான் கொடுக்கின்றன. எனவேதான் மெய்ஞானம் இன்று மிக வளர்ச்சி அடைந்த விஞ்ஞானத்தை விட மிக உயர்வாகத் திகழ்கிறது.

அந்தவகையில்தான் உலகம் எங்கும் உள்ள மக்களில் பலர் விஞ்ஞான வளர்ச்சியின் முழுப் பயனை மெய்த்து அனுபவித்தவர்களாக, மன அமைதியை அளிக்கவில்லை என்ற காரணத்தால் இந்துமத்தில் சேர்ந்து அதனுடைய கோட்பாடுகளைப் பிடித்து மன அமைதியைப் பெறுகிறார்கள்.

மேலும் உலகில் உள்ள எல்லா பொருட்களிலும் இடம்பெற்றிருப்பது மிகச்சிறிய அணு என விஞ்ஞானம் கூறுகிறது. ஒரு சக்தியே உலகில் அவ்வளவு பொருட்களையும் ஆட்டுவிக்கிறது என மெய்ஞானம் கூறுகிறது.

இந்திய நாட்டின் குடியரசு தலைவராக இருந்த தத்துவஞானி டாக்டர் இராதாகிருஸ்ணன் ஒரு முறை உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானி திரு பெட்ரா.ஃடரஸ்ட்சை

> "மனிதன் ஆரம்ப காலத்தில் விலங்குகளைப் போலவே இருந்தான். அவனுடைய உணர்ச்சிகள் பசி, தாகம், வேட்கை போன்ற அடிப்படையில் மட்டும் தான் அமைந்திருந்தன."

சந்தித்தபோது நான் ஒரு அரைகுறை மனிதன் ஏனென்றால் மனதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது முழுமனிதனாக வர முயலகிறேன்'' என்றார். அதற்கு பெட்ராடரஸ்ட் "விஞ்ஞானம் மட்டும் கற்பதால் பயனில்லை மெய்ஞானமும் கற்றால் தான் முழு மனிதனாகலாம்'' என்றார். இந்த வாசகம் விஞ்ஞானமும் மெய்ஞானமும் வாழ்க்கைக்கு தேவை என்பதை எடுத்துக் கூறுகிறது.

"எல்லாம் நானே எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் சக்தியாய் எல்லாவற்றிலும் நிறைந்த சக்தியாய் எல்லாமே மீண்டும் திரும்பி வந்து கலந்து ஒடுங்கிவிடும் சக்தியாய் இருப்பவன் நானே'' என்று பகவத்கீதையில் பகவான் கூறுகிறார். இதுவெறும் விஞ்ஞான தத்துவம் மட்டுமல்ல. இந்துமதம் கூறும் மெய்ஞானமே ஆகும்.

"எவன் பரம்பொருளை எல்லா உயிர்களிடத்திலும் பார்ப்பதாக உணர்கிறானோ அவன் பிரம்ம ஞானத்தை அடைந்தவனாகிவிடுகிறான் என்கிறது கீதை'' இந்துமதம் விஞ்ஞான பூர்வமானது என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

பிரபஞ்ச உண்மைகளையும் உயிரின் முக்கியத்துவத்தையும் மிகநுணுக்கமாக உணர்த்துவது இந்துமதம். மேலும் இந்துமதம் கூறும் இயற்கையின் சக்திகளே விஞ்ஞான பூர்வமானது என்பதை பிரபல விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்கின்றனர்.

1300 ஆண்டுகளுக்கு முன்பே அருள்நந்திசிவம் என்ற சந்தான குரவர் "சிவஞானசித்தியார்'' என்ற நூலில் தாவரங்களுக்கு உயிர் உள்ளதாக சொல்லியிருக்கிறார். அதைத்தான் இன்று விஞ்ஞானி ஜகதீச சந்திரபோஸ் எடுத்துக்கூறி நோபல் பரிசு பெற்றிருக்கிறார். இதிலிருந்து நாம் அறியக் கூடியது விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் பல ஒற்றுமைகள் உண்டு என்பதே. மேலைநாட்டுகள் பலவும் இன்று விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறன. ஆனால் அவர்கள் மன அமைதிக்காக மெய்ஞானத்தை நாடி வருகிறார்கள். விஞ்ஞானத்தால் கிடைக்கப்பெற்ற சாதனங்கள் நிம்மதியைத் தரவில்லை என ஒப்புக்கொள்கிறார்கள்.

எப்போதும் முன்னால் ஒரு அடிவைத்து செல்ல வேண்டும் "முன்னேறு'' என்பதே விஞ்ஞானிகளின் தாரக மந்திரம். ஆம் இந்த தத்துவத்தை நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவான உபநிடதங்களும் எந்த நிலையிலும் அப்படியே இருந்துவிடாதே எழுந்திரு விழித்திரு இலக்கு நோக்கிப் புறப்படு எனக் கூறுகிறது. அதாவது அடையவேண்டிய எல்லாம் அடையும் வரை அமைதி கிடையாது.

உண்மையை தொடர்ந்து ஆராய்ந்து தெளிவுபடுத்திக்கொள் என்கிறது மெஞ்ஞானம். ஆக மனித வாழ்வுக்கு விஞ்ஞானத்துடன் மெய்ஞானமும் தேவையாகும். அதன் மூலமே மனதம் முழுமைபெறும்.

■

"அருள் நெறிச் செல்வர்"
**வி. செல்வரத்தினம் J.P**
(அகில இலங்கை சமாதான நீதவான்)

# கந்தையானாலும் காசாக்கிக் காட்டு



கந்தையானலும் கசக்கிக் கட்டு என்பது முதுமொழி.
கந்தையானாலும் காசாக்கிக் காட்டு என்பது புதுமொழி போலும்.
இந்தப் புதுமொழிக்கு ஏற்றாற்போல் ஒன்றுக்கும் உதவாது எனக் கழிக்கப்பட்ட குப்பைகளை வளமான இயற்கைப் பசளையாக்கி பயிர் வளர்க்கிறது யாழ்ப்பாண மாநகர சபை.
சூழல் பாதுகாப்பு, அழகான நகரம், வேலை வாய்ப்பு, இரசாயன பசளைகளுக்கு மாற்றீடு என பல நன்மைகள் இந்த இயற்கைப் பசளை தயாரிப்பதனூடாகக் கிடைக்கின்றன.
மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ். அராலி வீதியில் யாழ்.மாநகர சபையின் கூட்டுப்பசளை தயாரிக்கும் இடம் உள்ளது. சுற்றுச்சூழல் அதிகாரசபையின் நிதிப் பங்களிப்புடன் யாழ்.மாநகர சபையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது பசளை தயாரிக்கும் மையம்.
ஆரம்பிக்கப்பட்ட வேகத்துக்கும் திட்டமிடலுக்கும் ஏற்றவாறு இங்கு செயற்பாடுகள் அமையாவிட்டாலும். இன்னமும் இருக்கும் வளங்களைக் கொண்டு குப்பைகளில் இருந்து கூட்டுப் பசளை தயாரிக்கும் பணி தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறது.
யாழ்ப்பாணத்து மக்களால் அன்றாடம் பயன்படுத்தபட்டு கழித்துவிடப்பட்ட திண்மக்கழிவுகளை அழிப்பதை பிரதான நோக்கமாக கொண்டு இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
இருப்பினும் போதிய இடவசதி மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை வழங்களின் கிடைப்பனவு என்பவற்றில் ஏற்பட்ட குறைபாடுகளின் விளைவாக இதன் உற்பத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியளிக்கவில்லை.
அத்தோடு இங்கு தாயாரிக்கப்படும் கூட்டுப் பசளையானது போதிய விளம்பரம் இல்லாததன் காரணமாக மக்கள் மத்தியில் சென்றடைவது குறைவாகக் காணப்படுகின்றது என்கிறார் இந்நிறுவன மேற்பார்வையாளரான பாஸ்கரன்.
யாழ்.நகரில் இருந்து அன்றாடம் பெருந்தொகையில் கழிவுகள் அகற்றப்படுகின்றன.
சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் இவற்றை அகற்ற வேண்டும். அகற்றப்படும் கழிவுகள் சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் மீள்சுழற்சி செய்யப்பட


வேண்டும். மாறாக தற்போது செய்வதைப்போல் நகருக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்ப்பதனால் அப்பிரதேசம் பாதிக்கப்படுவதோடு அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மற்றும் அவ்வீதியைப் பயன்படுத்தும் ஏனைய மக்களும் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இதனைக் கருத்திற்கொண்டுதான் கழிவிலிருந்து கூட்டுப்பசளை செய்யும் திட்டம் உருவானது. ஏறக்குறைய 10 ஆண்டுகளாக கழிவில் இருந்து கூட்டெரு தயாரிக்கும் பணி இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் குறிப்பிடுகிறார் பாஸ்கரன்.

மேலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் பசளைகள் ஐந்து மற்றும் பத்து கிலோ பைக்கற்றுக்களாகப் பொதி செய்யப்பட்டு கிலோ 20 ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. நன்கு சுத்தம் செய்யப்பட்ட பசளை பெட்டியொன்று 5000 ரூபாவாகவும் சதாரண 2ஆம் தர பசளை 3500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது எனவும் அவர் கூறுகிறார்.

இப்பசளையின் தரத்தை மேலும் உயர்த்த முடியும். ஆனால் போதிய வளம் இல்லை. நன்னீரைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம் போான்றவற்றால் இருப்பதைக்கொண்டு தற்போது பசளை தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். இது போன்ற நிறுவனங்கள் சிறப்பாக செயற்படும்போது எமது சுற்றுச்சூழல் பாதிப்படையாமல் இருக்கும். ஒன்றுக்கும் உதவாது எனக் கழிக்கப்பட்டவற்றை நல்ல பசளையாக்கி இலாபமீட்டவும் முடியும். ஒரே திட்டத்தில் பல நன்மைகளை அடைய முடியும் எனவும் விளக்கமளிக்கிறார் கூட்டுப்பசளை தயாரிக்கும் நிறுவன மேற்பார்வையாளரான பாஸ்கரன்.

வ. ரஜிந்தன்




*தொடங்கினேன் என் பயணத்தை ஓர் பாதை வழி*
*பயணம் இலகுவாய் இல்லை*
*பாதை எங்கும் முற்களும் கற்களும் குழிகளும்*
*பார்க்கும் இடமெல்லாம் புதர்களும் விஷச் செடிகளும்*
*எம் முன்னால் சென்றோர் எண்ணவில்லை*
*தம் பின்னரும் சந்ததி வருமென*
*நான் அவர்கள் போல் எண்ணவில்லை*
*சீராக்குகின்றேன் அப் பாதையை*
*–என் பயணத்தின் நேரத்தை செலவழித்து*
*என் பயண நேரம் தாமதமானால்*
*–எனக்குக் கவலையில்லை*
*என் பின்னால் வருவோர்*
*முன் சென்ற என்னை*
*குறை கூறினால் அது போல்*
*என் வாழ்வில் வேறு கவலையில்லை.*



# சமூக இசைவில்லாத வாழ்வு வாழ்வன்று...

மக்களது வாழ்க்கை சமூகமயமாக வேண்டும். சமூக இசைவு இல்லாதுவிடின் மக்களது வாழ்வு அர்த்தமற்றது. சமூகம் மக்களுக்கு உதவவேண்டும். அதுபோல மக்கள் சமூகத்திற்கும், சமூக இசைவாக்கத்திற்கும் பேருதவியாக இருக்கவேண்டும். சமூகத்தின் அங்கமான மனிதன் சமூகத்தைவிட்டு விலகமுடியாது இதனை கருத்தில் இருத்தி நீதி உரைக்கும் நூல்களும் இலக்கிய நூல்களும் பிறவும் எழுந்தன.

நல்லனவற்றை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் அதற்காக சமூகம் ஒரு பொதுவான கட்டுக்கோப்பில் இயங்கவேண்டும். பொருத்தமான சமூகப் பிணைப்பால் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நல்லனவற்றை குறிக்கோளாக்கியும் இலக்காகக் கொண்டும், இலக்கியக் கர்த்தாக்கள் நூல்களைப் படைத்தனர். அதனாலேயே மக்கள் அவர்களைப் பெரியோராகப் போற்றி கொண்டாடுகின்றனர்.

ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வதே வாழ்க்கை என்றும், அந்த இணைப்பு மூலம் சமூகத்திற்கு உதவுவதே பெருமையுடையது என்றும் இருவரும் இணைந்து வாழ்வில் பிற மாதரையோ பிற ஆடவரையோ தீண்டாத நெறி கற்புடைய வாழ்வென்றும் அது கடவுள் தன்மையைக் கொடுக்கும் என்றும் உறுதிபடக் கூறினார்கள். அந்தப் பெரியோராகிய சான்றோர் தாம் நல்ல நெறிகள் துலங்கும் வண்ணம் ஏனையவற்றையும் படைத்து அந்த நல்ல நெறிகளுக்கு ஊடாக உலகம் வாழ வழிகாட்டல்களை உருவாக்கியிருக்கின்றார்கள். ஏனைய உயிரினங்கள் கூர்ப்புப் பெறாத நிலையில் இருக்க ஆறாவது அறிவான பகுத்தறிவை மக்கள் பெற்றமையால் இந்த உருவாக்கம் எல்லாம் நிகழ்ந்துள்ளன.

உலகத்து அறிஞர் பெருமக்கள் எல்லாம் ஏகமனதாக அங்கீகரித்துள்ள உலகப் பொது நீதிகளை உடைய திருக்குறள் ஒரு வாழ்வியல் நூலாக ஒரு சமூக நூலாக எழுந்ததுக்கு கூர்ப்படைந்த பகுத்தறிவே காரணம் என்று உறுதிபடக் கூறலாம். மக்கள் என்ற தோற்றம் கொண்ட அனைவரிடமும் பகுத்தறிவுண்டு. அது கற்றோரிடத்தும், ஞானிகளிடத்தும் கூர்ப்புடையதாக இருக்கும். பகுத்தறிவு கொண்டு நல்லனவற்றை நாடினாலேயேதான் உலகு பயன்படும். அறிவின் துணைகொண்டு மற்றையோர் உணராத வகையில் குள்ளத் தனத்தோடும், கெட்டிக்காரத் தனமாக தீங்குகளை தவறுகளையும் செய்ய முற்பட்டால் உலகிற்கு பயனில்லை அவர் கெட்டவையே விளைவிக்கும்.

நல்லன செய்ய வேண்டும் அது இல்லற வாழ்விலேதான் நிறைவேறும் எனக் கருதிய வள்ளுவர் இல்லறவியலூடாகவே தான் கருதிய பண்புகளை நிலை நிறுத்துகின்றார். அங்கிருந்தே திருக்குறளின் கருத்துக்கள் ஆரம்பமாகின்றன என்று கூடச் சொல்லலாம்.

முதல் அதிகாரம் தொடங்கி நான்காவது அதிகாரம் வரை தற்சிறப்பு பாயிரமாக அமைகின்றன. அந்தப் பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது. அவை கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீர்த்தார் பெருமை, அறம் வலியுறுத்தல் என்பனவாகும்.


சாதிக்க விரும்பும் ஒருவன் ஒன்றை எடுத்த எடுப்பில் மேலே சொல்வதில்லை. அதற்கு அணி செய்து சூழலை அனுசரித்து மெல்ல மெல்ல மேலே சொல்லுவான். அவ்வாறு நூல்கள் சொல்லவேண்டியவை சொல்வதற்கு பாயிரத்துள் பிரயோகிக்கப்பெற்ற சொல்லாட்சி முறைமை கருத்தை வளர்ப்பதற்கான உத்திகள் போன்றவை அமைகின்றன. இவற்றின் அடிப்படையிலேயே நூலை எழுதுதல் சாத்தியமாகின்றது.

அந்தமுறையில் முதல் நான்கு அதிகாரங்களும் பாயிரமானது. பாயிரம் நூலன்று. ஆயினும் நூலுக்கு மிகவும் வேண்டப்படுவது.

வள்ளுவத்தில் வரும் பாயிரம் நூலுள்ளே அடக்கம். ஆயினும் வள்ளுவர் தாம் கருதியதைத் தொடங்கும் இடம் இல்லறவியல் கருதியதை நிலைநாட்ட இல்லறவியலும் துறவறவியலும் என இரு கூறாக்கி இல்லறவியலுக்கு சிறப்புத்தந்து அதனை முதலிற் கூறுகின்றார்.



வள்ளுவர் தம்நூலில் இரு நூறு குறட்பாக்களை இல்லறவியலில் தந்ததோடு நில்லாமல் காமத்துப் பாலையும் இல்லறத்துக்காகவே தந்தார். ஏனைய பல இடங்களிலும் தாம் இல்லறப் பங்காகக் காட்டியுள்ளார். எந்த இடத்திலும் பெரும்பான்மைக்கு விதி இல்லை. திருக்குறளில் இடம்



பெற்ற பெரும்பான்மையான செய்திகள் இல்லறத்தானுக்கே உரியதாக எடுத்துக்காட்டியிருந்ததால் திருக்குறள் முழுவதுமே இல்லறத்தானுக்கு என்ற வாழ்வியல் நூலாகிவிட்டது.

இல்லறத்திற்கூடாகவே சமூகத்திற்கு எவ்வளவோ கூறப்படுகின்றது. ஒருவனும் ஒருத்தியும் இணைந்து இல்லறம் எனும் நல்லறம் காக்க இயற்கையாகக் கிடைத்த ஊக்கிதான் இணைவிளைச்சு ஆகிய உடலுறவு. அதனை உணர்ந்து அறிவோடு நடத்தல் அவசியமானது. ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்வது வெறும் காமச்சேர்க்கையாகாது. ஒழுக்கக்கேடானதும் அல்ல. அது வேண்டப்படுவதே. மாக்களின் (மிருக) உணர்வே வேண்டத்தகாதது.

உண்ணல், உறங்கல் மிருகத்திற்கும் உண்டு. அங்கு எந்த மிருகமும் தம் இச்சைக்காக எதனோடும் சேரலாம். உறவுமுறை பின்பற்றப்படுவதில்லை. மனதின் உறவு முறையைப் பண்பாடாகக் கருதி தூய்மையுடன் நடப்பான்.

மனிதனானவன் நல்ல ஒழுக்க வாழ்வு வாழ்ந்துகொண்டு விருந்து கோடலுடனான சமூகத் தொண்டு புரிந்து சமூகவாழ்வு வாழ்தல் வேண்டும். சமூகத் தொண்டு ஏனையோரைக் காட்டிலும் இல்லறத்தானுக்குச் சிறப்பானதும் உரிமையானதும் கூட.

"துறந்தார்க்குத் துப்பரவு வேண்டி மறந்தார் கொல் மற்றை அவர்கள் தலம்" இதனால் துறவறத்தார்க்கு உதவியாக உண்டி, மருந்து, உறையுள் தந்து துணைபோதல் இல்லறத்தார் கடமையாயிற்று.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங் கைம்புலத்தா ஓம்பல் தலை" இவ்வாறு வள்ளுவர் ஓம்பல் செய்வேனை நிரைப்படுத்துகையில் அவனை ஈற்றில் நிரல்படுத்தியுள்ளார். அவன் தனக்கு முன்னுரிமை தரவில்லை.

இதன் உடன்பட்டு மேலும் "தென்புலத்தார் தெய்வம் விருத்



தோக்கல் என்றறிவரோ டின்புறத் தானுண்டல் இனிதாமே" அன்புறவே தக்கவரையின்றித் தனித்துண்டல் தான் கவர்மீன் கொக்கருந்த வென்றே குறி" எனத் தனித்துண்ணலை விரும்புவான் தாழ்ந்தவன் என நீதி வெண்பா கூறுகின்றது என்பதும், பிறர் கருதி வாழாத வாழ்க்கை வாழ்க்கையன்று என்பதாலும் கூறப்பெறும் சமூக உணர்வுகள் மனிதனிடம் இயல்பாகவே வர வேண்டியவை

**வெம்மையுடைய தடிசல்**
**விழுப்பொருள்கள்**

**செம்மை யுடையதாம் சேவம் -**
**தம்மை**

**பிறர்கருதி வாழ்வதாம் வாழ்க்கை**
**இம்மூன்றும்**

**உறவே தோர்வதா மோர்ப்பு**

என அறநெறிச்சாரம் உரைக்கும் ஆக எந்த ஒரு மனிதனுக்கும் இருக்கவேண்டியதாக இருவர் தனியை பிறர்கருதி இருக்கின்ற வாழ்க்கை சமூக இசைவுள்ள வாழ்க்கையே வாழ்வாகும்.

மனிதனுக்கு இருக்கவேண்டிய சமூகத் தொண்டை அந்த மனிதனிடமிருந்து எடுத்துக்கொண்டுவிட்டால் விலங்கினமான அவன் மக்களாக உடலமைப்பால் தோற்றந் தந்தாலும் மாக்களாகத்தானே இருப்பான். விலங்கொரு மக்களனையர் ஆதலுங்காண்க. மக்கட்சுட்டு அல்லாத அஃறிணையான விலங்கிடமும் இணைவிழைச்சு போன்றன இருக்கின்றன. மனிதனிடமும் இருக்கின்றது. கூர்ப்புடைய பகுத்தறிவால் உணரப்பெற்ற சமூக இசைவுடைய சமூகத் தொண்டுதான் அவனையும் விலங்கையும் வேறுபடுத்துகின்றது. ஆக சமூக தொண்டாற்றுபவனே மனிதப்பண்பு உடையவன் ஆகின்றான். அவனே மனிதன் எது எவ்வாறிருந்தாலும் இசைவில்லாத மனிதனுக்கு உண்மை வாவேது இல்லையன்றே.

■

முதுகலைமாணி. பண்டிதர்
**ம.ந.கடம்பேஸ்வரன்**
சிந்துபுரம்
வட்டுக்கோட்டை



# தீராத தலைவலியாய் தீயணைப்பு சேவை




உலகத்திலேயே மிகவும் மோசமான தீயணைப்பு சேவை எங்குள்ளது. மிகப்பழைமையான தீயணைப்பு பொறிமுறை எங்குள்ளது என்று எங்கேனும் கேள்வி வந்தால் தயங்காமல் பதிலளிக்கலாம் யாழ்ப்பாணத்தில் என்று. யாழ்ப்பாணத்தில் எங்காவது தீவிபத்து என்றால் பெரும்பாலும் தீ முழுமையாகப் பரவிய பிறகோ அல்லது அனைத்தும் எரிந்து நாசமான பின்போ தான் தீயணைப்பு சேவை வாகனம் அங்கு வந்து சேரும். ஒன்றல்ல இரண்டல்ல பல தடவைகள் எமக்குக் கிடைத்த அனுபவம் இது.

பழைய இரும்புக்கு விற்கும் நிலையில் உள்ள யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் தான் வடக்கு முழுமைக்குமான தீயணைப்பு சேவைக்கு ஒரே நம்பிக்கை. ஆனால் இந்த நம்பிக்கைக்கு சற்றும் பொருத்தமே இல்லாமல் இருக்கிறது யாழ்.மாநகர சபை தீயணைப்பு சேவை.

1986 ஆம் ஆண்டு கனேடிய நிறுவனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கிய தீயணைப்பு சேவை வாகனம் ஒன்றுதான் இன்றுவரை இச்சேவையில் உள்ளது. உழைத்துக் களைத்து இனியும் முடியாது என ஓய்வு கோரும் வாகனத்தை வேறு வழியே இன்றி இன்னமும் இழுத்துபிடித்து வைத்துள்ளது யாழ். முாநகர சபை. வானுயரும் கட்டடங்கள், பலகோடி முதலீட்டில் வர்த்தக நிறுவனங்கள் என ஆங்காங்கு அபிவிருத்தியின் சாயல்கள் தெரிந்தாலும். இன்னும் மாறாமல் அப்படியே இருக்கின்றன தீயணைப்பு சேவையும் அதற்குரிய வாகனங்கள் மற்றும் கருவிகளும். யாழ். மாநகர சபையின் தீயணைப்பு சேவை எப்படி உள்ளது? அப்பிரிவின் இயக்குனராகக் கடமையாற்றும் அன்ரனி என்பவரிடம் கேட்டேன்.

தீயணைப்பு சேவைக்கு அடிப்படையானது தீ அணைப்பு வாகனமாகும். தற்போது எம்மிடம் உள்ளது 1986 ஆம் ஆண்டு கனடிய





நிறுவனம் ஒன்றினால் யாழ்.மாநகர சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட வாகனம் தான்.
அது தற்போது பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது. இதன் பாகங்களில் 70 வீதத்திற்கும் அதிகமாக சேதமடைந்துவிட்டன. இதனைக் கொண்டு சிறிய தீவிபத்தொன்றைக் கூட கட்டுப்படுத்துவது கடினம். அவசர தீயணைப்பு சேவைக்காக செல்லும்போது இந்த வாகனம் நடுவழியில் பழுதடைந்து நின்ற வரலாறுகளும் உண்டு என்றார் விரத்தியுடன்.

மேலும் யாழ்.மாநகர சபை தீயணைப்பு சேவை பிரிவில் நீண்ட காலமாக ஆளனிப் பற்றாக்குறை நிலவி வந்தது. வெறும் 9 பேரே இங்கு பணியாளர்களாக இருந்தனர். தற்போது புதிதாக 15 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிரந்தர பணி நியமனம் வழங்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன எனவும் தீயணைபப்பு பிரிவு இயக்குனர் குறிப்பிட்டார்.

> பழைய இரும்புக்கு விற்கும் நிலையில் உள்ள யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் தான் வடக்கு முழுமைக்குமான தீயணைப்பு சேவைக்கு ஒரே நம்பிக்கை.

ஆனால் தற்போது இச்சேவைக்கு புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கு எந்தவித பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. இச்சேவைக்கு சிறப்பான பயிற்சியும் அனுபவமும் முக்கியம்.

நன்கு பயிற்சியும் அனுபவமும் கொண்ட ஒன்பது பேரில் பலர் ஓய்வு பெறும் தறுவாயில் உள்ளனர். இவைகள் வயதும் உடல் நிலையும் சிறப்பாக சேவையாற்ற இடமளிப்பதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
தீயணைப்பு சேவைப் பிரிவில் பணியாற்றும் டெஸ்மன் என்பவருடன் பேசியபோது, மிக அண்மையில் அதாவது 15-06-2013 அன்று கிளிநொச்சியில் உள்ள பாரிய வர்த்தக நிறுவனமான குமரகுரு பல்பொருள் வாணிபத்தில் ஏற்பட்ட பாரிய தீயை அணைப்பதற்கு தாம் அங்கு சென்றோம். தட்டுத்தடுமாறி தற்போதுள்ள வாகனத்தில் ஒருவாறு அங்கு சென்றுவிட்டோம். நாம் செல்வதற்குள் அந்த வர்த்தக நிலையம் முற்றாக எரிந்துவிட்டது.
அங்கிருந்து திரும்பும் வழியில் தமது வாகனம் பளுதடைந்துவிட்டது.

பின்னர் அதனைக் கட்டி இளுத்தே இங்கு கொணடு வந்து சேர்த்தோம். தீயணைக்க போகும் வழியில் இந்த வாகனம் பழுதடையாமல் இருந்தது ஆச்சரியம் தான் என்றார்

வ. ரஜிந்தன்



# அளவெட்டி தந்த அற்புதக் கலைஞர்

கலாபூஷணம்
செல்லையா சிவப்பிரகாசம்

கலாபூஷணம், சிற்பக் கலாநிதி செல்லையா சிவப்பிரகாசம் சித்திரம், சிற்பம், வடிவமைப்பு ஆகிய துறைகளில் யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கலைஞர்.

அளவெட்டி வடக்கில் செல்லையா – தெய்வானைப் பிள்ளை தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 1928.06.21 ஆம் திகதி பிறந்த இவர் சிறுவயதில் சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று எஸ்.எஸ்.எல்.சி வரை சித்தியடைந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்து படித்தார்.


அப்போதே இவருக்கு சித்திரத்திலும், சிற்பத்திலும் ஆர்வம் ஏற்பட்டது. அம்பனை வடக்கில் விவசாயம் செய்யும் பொழுது சிறு வயதிலேயே களிமண்ணை எடுத்து உருவங்கள் செய்யத் தொடங்கினார். இவரின் கலை ஆற்றலைக் கண்ட பெற்றோர் இவரின் குருவான திரு.ஏ.இராசையா ஆசிரியரின் ஆசியுடன் மேற்படிப்பிற்காக கொழும்பு அரசினர் நுண்கலைக் கல்லூரியில் கலை படிக்க அனுப்பினர்.

அங்கு 1952ஆம் ஆண்டில் இருந்து 1966ம் ஆண்டு வரை சித்திரம், சிற்பம் ஆகிய இரண்டையும் திறம்படக் கற்று Diploma in art என்ற பட்டம் பெற்றார். இவரின் கலை ஆற்றலைக் கண்டு அறிந்த அளவெட்டிப் பெரியார் பண்டிதர் நாகலிங்கம் என்பவர் இவரை கலைப்புலவர் திரு.கே.நவரத்தினம் என்பவரின் சிபாரிசுடன் யாழ்.மத்திய கல்லூரியில் சித்திர ஆசிரியராக அமர்த்தினார்.

1956 ஆம் ஆண்டில் இருந்து யாழ். மத்திய கல்லூரியில் சித்திரமும் சிற்பமும் ஓங்கி வளரலாயின. இவரின் கலைத்திறன் யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது இலங்கை பூராகவும் பிரகாசிக்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்திரபாடத் துறையை ஆரம்பித்த போது அதன் போதனைத் தேவையைப் பூர்த்தி செய்ய திரு.செ.சிவப்பிரகாசத்தின் தேவை தேவைப்பட்டமை இவருடைய திறமை, ஆற்றல் போன்றவை பற்றி முன்னர் கூறியதை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது. இவர் ஏறக்குறைய 45 சிலைகள் வரை செதுக்கி உள்ளார்.





1996ஆம் ஆண்டு கலாபூஷணம் தேசிய விருது இவருக்குக் கிடைத்தது. மேலும் பல்வேறு இடங்களில் இவரைக் கௌரவித்து 12 தங்கப்பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவர் சித்திரக் கலையை யாழ்ப்பாணத்தில் வளர்க்க அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சிவசாய சித்திரக் கூடம் என்கின்ற ஒரு நிறுவனத்தையும் நடத்தி வருகின்றார். இது பல மாணவர்களை உருவாக்க உதவி வருகின்றது. இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் மேற்குலக நாடுகளிலும் இவரின் புகழைப் பரப்பி வருகின்றனர்.

பிரபல இந்திய சிற்ப வல்லுநர் திரு.மணி அவர்களே இவருடைய குருவாக அமைந்தமையும் ஒரு சிறப்பு அம்சம். இறைபக்தி உடையவராக இருந்ததனாலே இவருடைய கலை ஆக்கங்கள் எல்லாம் உயிர்துடிப்பு உடையவவாகவும் துல்லியமானதாகவும் காணப்படுகின்றன. அதனால் எல்லோராலும் போற்றப்படுகின்றார்.

வேத சாஸ்திர விதி முறைகளுக்கு அமைய தேவாலய சிற்பங்கள் வடிப்பதிலும் இவர் வல்லவர். இவர் கலைத் துறையில் பல்கலைக்கழகம் போன்றவர்.

ஒருவர் தெரிவு செய்யும் துறையில் அல்ல, தெரிந்தவர்களின் திறமையிலேயே அத்துறையின் முக்கியத்துவம் தீர்மானிக்கப்படும் என்பதற்கு சிற்பக் கலாநிதி அவர்கள் சிறந்த எடுத்துக் காட்டாக் விளங்குகின்றார்.

இவருடைய சிவசாயி சித்திரக் கூடம் பேசும் சிற்பங்கள் நிறைந்த பூங்காவாகக் காணப்படுகின்றது.


யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பித்து பல்கலைக்கழகம் வரை உயர்ந்து நிற்பது இவரின் கடின உழைப்பின் விளைவு என்று கூறுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

இறைவனின் படைப்பை இறைவனே ஐயப்படும் அளவிற்கு அப்படியே அமைகின்றமையே இவருடைய தனித்தன்மை எனலாம்.

நல்லூர் - முத்திரைச்சந்தையில் அமைந்திருந்த குதிரைச் சவாரி செய்யும் சங்கிலிய மன்னனின் சிலை, யாழ்.மாநகர சபை மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள உள்ள சேர் பென்.இராமநாதன் சிலை போன்றவை இவர் செதுக்கியவற்றில் சிலவாகும்.

தொகுப்பு : உமாசுதன்





# வெற்றிக்கான படிக்கற்களாக தோல்விகளை மாற்றியவர்


வாழ்க்கையில் இன்னல்கள் வருவது வழமை. அதனைத் தூசெனக் கொள்வதும் அதுவே நம் வாழ்வின் கதையெனக் கொள்வதும் நாம் எண்ணும் எண்ணதிலேதான் உள்ளது. அவ்வாறு வாழ்விலே பல இன்னல்களையும் பல போராட்டங்களையும் பல தோல்விகளையும் கண்டவர்தான் வைத்தி சண்முகலிங்கம்.

ஓர் சிறு தொழிலாளியாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய வைத்தி சண்முகலிங்கம் பின் ஒரு அலுமினியத் தொழிற்சாலைக்கே சொந்தக்காரரானார்

முதலில் டொலர் அலுமினியம் தொழிற்சாலையில் சிறு தொழிலாளியாகச் சேர்ந்து அலுமினியத் தகட்டில் பாத்திரங்கள் உருவாக்கும் முறமையை கற்றுக் கொண்டார். அவ்வாறு கற்றுக்கொண்டவர் தனது முயற்சியாலும் தன் மேல் தான் கொண்ட நம்பிக்கையாலும் 1968ம் ஆண்டு அம்பனை எனும் பிரதேசத்தில் Elephant Mental & Aluminium Works எனும் பெயரில் ஓர் அலுமினியப் பாத்திரங்கள் உருவாக்கும் தொழிற்சாலையை உருவாக்கினார்.



அத்தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட பொருட்கள் இலங்கை பூராகவும் விநியோகிக்கப்பட்டன. அவர் வாழ்வில் முன்னேறிக்கொண்டு செல்லும் நிலையில்தான் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானது. 1988 ஆம் ஆண்டு அமை



திப் படையென்ற பெயரில் இங்கு வந்த இந்திய இராணுவத்தினர் தமது காவலரனாக அத்தொழிற் சாலையை உருவகித்தனர்.

ஆறுமாத காலம் அதைத் தமது காவலரனாக பயன்படுத்திய பின்பு அதனை விட்டு வெளியேறினர். அவர்கள் இதனை விட்டுச் சென்ற பின் மீண்டும் தொழிற்சாலையில் அலுமினியப் பொருட்கள் உருவாக்கும் தொழில் ஆரம்பமாகியது. ஆனால் நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1989 ஆம் ஆண்டு மறுபடியும் யுத்தம் உச்சம் பெற்றது. பலாலியில் தொடங்கிய யுத்தம் முன்னேறி முன்னேறி அம்பனை வரை தொடங்கியது.

அந்நேரத்தில் வலி. வடக்கு மக்கள் தம் சொந்த இடங்களை விட்டு பிற இடங்களுக்கு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். வைத்தி சண்முகலிங்கமும் தொழிற்சாலையையும், வீட்டையும் விட்டு அளவெட்டிக்கு இடம்பெயர்ந்தார். எவ்வளவு காலம்தான் இன்னொருவர் வீட்டில் தங்கியிருப்பது?

பிள்ளைகளும் கல்வி கற்கும் பருவத்தில் இருந்தனர். ஓராண்டு காலத்தின் பின் அவர் கொழும்புக்கு குடும்பத்துடன் சென்று விட்டார். வறுமை மீண்டும் அவரை தன் பிடிக்குள் போட்டுக்கொண்டது. ஆனால் அவர் சோர்ந்துவிடவில்லை. நண்பர்களின் உதவியுடன் கொழும்பில் Abirami Aluninium Works எனும் பெயரில் ஓர் தொழிற்சாலையை நிறுவி அங்கும் அலுமினியப் பாத்திரங்களை உருவாக்கி விநியோகிக்கத் தொடங்கினார்.

காலங்கள் ஓடின இருபத்தொரு வருடங்கள் ஓடி முடிந்தன சொந்த இடம் திரும்பும் எண்ணம் அவர் கனவாக இருந்ததே தவிர நனவாக வில்லை. இருபத்தொரு ஆண்டுகளுக்குப் பின்தான் அவர் கனவு நனவாகியது. வலிவடக்கில் சில பகுதிகள் மீண்டன. மீண்டும் வந்தார். ஆனால் தொழிற்சாலை முழுமையாக சேதமடைந்திருந்தது. இயந்திரங்கள்தான் இருக்குமா? அவர் சலிக்கவில்லை. நம்பிக்கை விடாமுயற்சியுடன் மீண்டும் தனது தொழிற்சாலையை புணரமைத்து அலுமினியப் பொருட்களை உருவாக்கும் பணியில் இப்போதும் ஈடுபட்டு வருகின்றார். ■

சி.திவாகரன்

# ஒரே ஒரு ஊருக்குள்ளே ஒரே ஒரு ஐயா



க. சக்திவேல்

அடர்ந்த காட்டை அண்டி ஒரு கிராமம். அந்தக் கிரமத்தில் ஒருவர் மட்டும் தனிமையில் வாழுகிறார் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

கடும் குளிர், மழை, வெள்ளம், யானை, சிறுத்தை, பன்றி, பாம்புகள் உள்ளிட்ட விலங்குகளின் அச்சுறுத்தல் அனைத்தையும் எதிர்கொண்டு தன்னந்தனிக் காட்டு ராஜாவாக வாழ்கிறார் ஒரு முதியவர். பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பல்லவராயன்கட்டு சந்தியின் மேற்கு பக்கமாக 12 கி.மீ தொலைவில் அமைந்து உள்ளது பொன்னாவெளி கிராமம். இங்குதான் தனி ராஜ்ஜியம் செய்கிறார் 65 வயதான செல்லையா இராசநாயகம்.


2006 ஆம் ஆண்டுவரை வளம் கொழிக்கும் விவசாய பூமியாக பூத்துக் குலுங்கிக் கிடந்தது இந்தக் கிராமம். கிராஞ்சிக்குடா குளம், செக்கட்டிக் குளம், ஈச்சினாவெளி குளம கிராமத்தைச் சுற்றி மூன்று குளங்கள், வயல் வெளிகள், ஆடு, மாடு பட்டிகள் என இங்கு வளங்கள் ஏராளம்.

2006 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் வேறு இடங்களுக்கு நகர்ந்துவிட வெறிச்சோடியது கிராமம்.

2011 ஆம் ஆண்டில் தான் இங்கு மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

2006 ஆண்டுவரை சுமார் 15 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்தன. மீள்குடியேற அனுமதிக்கப்பட்டபோது 8 குடும்பங்கள் தாமாக முன்வந்து குடியேறின. எனினும் பல்வேறு காரணங்களால் அங்கு தொடர்ந்து இருக்க முடியாத நிலையில் அனைவரும் அயற் கிராமங்கள் அல்லது வேறு பகுதிகளுக்கு நகர்ந்துவிட ஒரே ஒருவர் மட்டுமே அங்கு இன்னமும் வாழ்கிறார் முதியவரான செல்லையா இராசநாயகம்.


"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பார்கள்.



பொன்னாவெளி கிராமத்தில் மட்டும் பழைமையான 3 கோவில்கள் உள்ளன. சிவன் கோவில், கண்னகை அம்மன் கோவில், பிள்ளயார் கோவில் என்பனவே அவை. இங்கு கண்னகை அம்மன் கோவிலில் தற்போது பூசைகள் தினமும் நடைபெறுகின்றன. சிவன் கோவில் மற்றும் பிள்ளயார் கோவிலில் பூசை இன்றி அழிந்த நிலையில் காணப்படுகின்றன. சைவப் பெரியார் ஆறுமுகநாவலரால் அடிக்கல் நாட்டப்பட்ட சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கட்டட இடிபாடுகள் கூட இன்னமும் இக்கிராமத்தின் பெருமையையும் புகழையும் பறைசாற்றுகின்றன. யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்ன நடந்தாலும இந்தக் கிராமத்தைவிட்டு வேறு இடத்துக்கு போகவே மாட்டேன் என்ற உறுதியுடன் தனிமையிலேயே வாழ்கிறார் இராசநாயகம்.


இயற்கையான இக்கிராமம் கி.மு 2ம் நூற்றாண்டு காலத்திலே பொன்னாவெளி கிராமம் என அழைக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது. இயற்கை எங்களுக்கு அளித்த கொடை இந்தக் கிராமம். ஆனால் இன்று யுத்தத்தால் அனைத்தும் அழிந்துபோயுள்ளன என்கிறார் இராசநாயகம். யானைகள் அட்டகாசம் குறைவடைந்து காணப்படுகின்றது என்றார்.

நீங்கள் ஏன் தனியாக இருக்கிறியள் அயல் கிராமத்துக்கு செல்லலாமே? என கேட்டபோது தான் நான் பிறந்த மண்ணை விட்டு வெளியிடத்துக்கு செல்ல விரும்பவும் இல்லை நான் திருமணம் செய்யவும் இல்லை. ஆரம்பத்தில் அரச உதவிகள் கிடைத்தது. இப்போது எங்களுக்கு எதுவும் வழங்குவது இல்லை எனக்கு சொந்தமாக பசுமாடுகள் உள்ளது.ஏனைய தேவைகளுக்கு அயல் கிராமத்துக்குச் சென்று வருவேன். அன்று ஊரில் இருக்கும்போது வேலைகள் தேடி வந்தது. இன்று அநாதரவாக வேலைகள் இன்றி வறுமையுடன் இருக்கிறேன். என்னுடன் இந்தக் கிராமமும் வளமும் அழிந்துகொண்டு செல்லப்போகின்றது என்றார்.



# மூலிகைச் செடிகளின் முக்கியத்தை உணரச் செய்த கண்காட்சி





என்னதான் அதிநவீன மருத்துவ முறைகள் அறிமுகமாகிவிட்டாலும். பாரிம்பரிய சுதேச மருத்துவ முறைகளின் மகத்துவம் இப்போது மீளவும் உணரப்படுகிறது. பக்க விளைவுகள் இல்லாத இந்த மருத்துவ முறையின் மகத்துவம் இப்போது மேலை நாடுகளிலும் உணரப்பட்டுள்ளது.


ஆங்கில மருத்துவ மோகத்தில் நாம் ஓடிக்கொண்டிருக்க அவர்களோ எமது மருத்துவத்தின் மகிமையை நாடி ஓடிவரும் காலம் உருவாகிவிட்டது. சித்த மருத்துவ முறைமைகள் குறித்து ஆராய்ச்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சித்த மருத்துவத்தின் தேவையையும் அதற்கு அடிப்படையாக மூலிகைகள் குறித்த அறிவூட்டல்களை அவை குறித்து மறந்துசெல்லும் எமது சமூகத்துக்கு நினைவூட்டுவது இருந்தது அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மூலிகைச் செடிகளின் கண்காட்சி கடந்த யூன் 11,12 மற்றும் 13ஆம் திகதிகளில் யாழ்பாணத்தின் நிலாவரை கிணற்றுக்கு அருகில் உள்ள நவக்கிரி கிராமத்தில் வடமாகாண விவசாய திணைக்களத்தினால் இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டது.

இக் கண்காட்சியில் அதிகளவிலான பொதுமக்கள், பல்கலைகழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டனர். இங்கு அதிக பட்சமாக இலங்கையிலும், மேலைநாடுகளிலும் பயன்பாட்டில் உள்ளதும் அருகிவருவதுமான 450 வகையிலான மூலிகைச் செடிகள் இங்கு வளர்கப்படுகின்றன.

இதற்கென 2 ஏக்கர் நிலப்பரப்பினை தனியாக ஒதுக்கி அவை மூலிகைச் செடிகளுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு மூலிகைச்செடிகள் வளர்க்கப்படுகின்றன.

1. மூலிகைகளின் கண்காட்சி.
2. மூலிகை மருந்துகளின் கண்காட்சி.
3. மூலிகை தொடர்பான மாநாடு.



என மூன்று பெரும் பிரிவுகளாக இக்கண்காட்சி ஓழுங்கு செய்யப்பட்டிருந்தது. மூலிகைகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட பல வகையான மருந்துப்பொருட்களும் பார்வைக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டிருந்தன.

மேலும் நோய்களை கண்டிறிந்து அவற்றுக்குரிய கிகிச்சை முறைமைகளும் அங்கு வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்டது. தற்காலத்தில் மருத்துவ உலகின் வெற்றிகரமான புரட்சிகளின் காரணமாக அதிகளவிலான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை பாரிய அளவிலான நோய்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியனவாகவும் உள்ளன.

இதன் காரணமாக சித்த மருத்துவம் மக்கள் மத்தியில் ஓர் முக்கியமற்ற வைத்திய முறையாகவே சென்று விட்டது. இதனால் மூலிகைகள் அருகிவரும் நிலையே காணப்படுகின்றன.

ஆனால் இத்தகைய மருந்துகள் உடனடியாக நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டதாக காணப்பட்டாலும் அவை உடலுக்கு சக்தி இழப்பினைக் கொடுக்கும் இரசாயன பொருட்களின் சேர்வையால் உருவாக்கப்பட்டவை. காலங்கள் செல்ல அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும். சித்த மருந்து மூலிகைகள் அவ்வாறில்லை அவை மனித உடலுக்கு ஏற்படும் நோய்களை தீர்ப்பதுடன் உடலுக்கு வலுவினையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவை. இவற்றை தற்கால மக்கள் உணர்வதில்லை.

இவ்வாறான மாநாடுகளும், கண்காட்சிகளும் இவற்றை உணர்த்துவதற்கு வழிவகுக்கும் அதன் பயன்பாடுகளை உணரவும் செய்யும். ஒவ்வொருவரும் தமது வீடுகளில் வெவ்வேறு வகையான மூலிகைச் செடிகளை வளர்த்தாலே இவை அருகிவரும் நிலை ஏற்படாது. இதனை அனைவரும் உணரும்படியாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.


பொதுவாக மூலிகைகள் உணவுடன் சேர்த்துக்கொள்வது மிகக்குறைவான பழக்கமாகக் காணப்படுகின்றது. மூலிகைகளைக் கொண்டு பலவகையான மருந்துப்பொருட்கள் உருவாக்கப்படுகின்றது. தோல் தொடர்பான நோய்கள் தொடக்கம் இருதய நோய்கள் வரையிலான பிரச்சினைகளுக்கு தீர்வினை அளிக்கும் வகையில் இவை உருவாக்கப்படுகின்றன.

நவக்கிரி மூலிகைப் பண்ணையில் உருவாக்கப்படும் மூலிகையைச் செடிகள் அச்சுவேலியில் உள்ள சுதேச மூலிகை மருத்துவ நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அங்கு அவை பல்வேறுவகையான மருந்துப் பொருட்களாக உருமாற்றப்பட்டு நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்றது நோயாளரின் வசதிகளுக்கும் நோய்களின் தன்மைக்கும் ஏற்ற வகையில் தைலமாகவும் மாத்திரைகளாகவும் தாயாரிக்கப்படுகின்றன.







ஆவுரோஞ்சிக்கல் எமது பாரம்பரிய பண்பாட்டின் முக்கிய மரபுரிமைச் சின்னமாகக் காணப்படுகிறது. ஆவுரஞ்சிக்கல் என்பது மந்தைகளுக்கு ஏற்படும் "தினவு" என்னும் ஒருவிதமான கடியினைப் போக்குவதற்காக அண்டுதொட்டு நீர் நிலைகளுக்கு அருகில் பல வடிவங்களில், பல அளவுகளில் வடிவமைக்கப்பட்ட கல்லுருவமாகும். இதைப் பழந்தமிழ் இலக்கியங்களில் மந்தைக்கல், ஆதிண்டு குற்றி, தீண்டுகுற்றி, ஆரோஞ்சிக்கல், ஆவுரிஞ்சி எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையில் முருகன் உறையும் இடமாக ஆவுரஞ்சிக்கல் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இம்மரபு எக்காலத்தில் இருந்து பயன்பாட்டுக்கு வந்ததென்பதற்கு உறுதியான ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆயினும் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே மந்தைகள் உணவுக்காகவும், விவசாய உற்பத்திக்காகவும் வளர்க்கப்பட்டதற்கான சான்றுகள் கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய அகழ்வாய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனால் தமிழகத்தைப்போல் யாழ்ப்பாணத்திலும் இதன் பயன்பாட்டிற்கு தொன்மையான வரலாறு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பிரித்தானியர் ஆட்சியில் குடாநாட்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்து அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் மக்கள் கூடும் இடங்கள், மாட்டு வண்டியின் போக்குவரத்து நடைபெற்ற பாதைகளில் மடம், கேணி, சுமைதாங்கி, ஆவுரஞ்சிக்கல் என்பன முக்கிய பயன்பாட்டு பொருட்களாக இருந்துள்ளன. இன்று நகரங்கள், கைத்தொழில் மையங்கள், மக்கள் குடியிருக்காத தரிசு நிலங்கள் போன்ற இடங்களில் காணப்படும் ஆவுரஞ்சிக்கற்கள், முன்னொரு காலத்தில் அவ்விடங்கள் வண்டில் போக்குவரத்து நடைபெற்ற பாதைகளாகவும், மந்தைகளின் துணையோடு விவசாய உற்பத்தி நடைபெற்ற இடங்களாகவும் இருந்துள்ளன என்பதற்கு சான்றாகக் காணப்படுகின்றன.

போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலயங்கள், வீடுகள், பிற கட்டிடங்கள் அழிக்கப்பட்டபோது அந்த அழிவிலிருந்து தப்பிய எமது பண்பாட்டு மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக ஆவுரஞ்சிக் கல்லையும், சுமைதாங்கியையும் குறிப்பிடலாம்.



இன்று ஆவுரஞ்சிக்கல் அமைக்கும் மரபு எமது பண்பாட்டிலிருந்து மறைந்தாலும் அண்மைக்காலம் வரை குடாநாட்டின் பல் வேறு இடங்களில் முக்கிய பயன்பாட்டுப் பொருளாக அது இருந்துள்ளதை வடமராட்சி, ஆனைக்கோட்டை, சங்கானை, கந்தரோடை, மட்டுவில், சரசாலை, கல்வியங்காடு, புத்தூர் முதலான இடங்களில் காணப்படும் ஆவுரஞ் சிக்கற்கள் உறுதி செய்கின்றன.

அவற்றுள் வடமராட்சியில் காணப்படும் ஆவுரஞ்சிக் கற்களில் தனித்துவமான சில வர லாற்று அம்சங்களை அவதானிக்க முடிகிறது. இது பற்றி அப்பிரதேசத்தை சேர்ந்த தொல்லி யல் பட்டதாரி மாணவன் அருள்ராஜ் வரலாற் றுத்துறைக்கு சமர்ப்பித்த ஆய்வு அறிக்கை யில் இருந்து தெளிவாகக் கண்டுகொள்ள முடி கிறது. அங்கு அடையாளம் காணப்பட்டுள்ள பெரும்பாலான ஆவுரஞ்சிக்கற்கள், அவை அமைக்கப்பட்ட காலத்தில் பொருளாதார ரீதி யில் செல்வாக்குப் பெற்ற குடும்பத் தலைவன் அல்லது குடும்பத் தலைவியால் அமைக்கப் பட்டவையாக உள்ளன.

அவை அக்கால சமூகக் கட்டமைப்பில் தனிப்பட்டவரின் சமூக அந்தஸ்த்தின் அடையா ளமாகவும் பார்க்கப்பட்டுள்ளது. இதன் இன் னொரு கட்ட வளர்ச்சியே பிற்காலத்தில் தனிநபர் பெயரில் அமைக்கப்பட்டு வரும் பஸ் தரிப்பு நிலையங்களாகும். சில ஆவுரஞ்சிக் கற்கள் குழந்தைப் பிரசவத்தின்போது அகால மரணமடைந்த பெண்களுக்காக அமைக்கப் பட்டவையாகும் அவ்வாறான ஆவுரஞ்சிக் கற் களில் இறந்தவரைப் பற்றிய சாசனம் பொறிக் கப்பட்டிருப்பதுடன், அவரது சமய நம்பிக் கையை வெளிப்படுத்தும் தெய்வ உருவங் களும், சமயச் சின்னங்களும் பொறிக்கப்பட் டுள்ளன.

அத்துடன் குறித்த பெண் இறந்த நாளில் அவர் நினைவாக அமைக்கப்பட்ட ஆவுரஞ்சிக் கல்லுக்குப் பூசை செய்து வழி படும் மரபு இன்றும் வடமராட்சியில் காணப் படுகின்றன. சில பழைமையான ஆவுரஞ்சி கற்கள் காணப்பட்ட இடங்கள் பிற்காலத்தில் சிவன் கோவிலாக மாற்றப்பட்டு ஆவுரஞ்சிக் கற்களே சிவலிங்கமாக வழிபடப்படும் முறை காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ஆவுரஞ்சிக்கற்கள் காணப்பட்டா லும் அவற்றில் சாசனம் பொறிக்கும் மரபை வடமராட்சியில் உள்ள ஆவுரஞ்சிக் கற்களி லேயே இதுவரை அடையாளம் காணமுடிந் துள்ளது.

ஐஸ்வர்யா

# மணற்காடு

யாழ்ப்பாணத்தில் ஒரு பாலை நிலம்



யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிக் கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள மணற்காடு தெற்காசியாவில் மிக நீண்ட கடற்கரைப் பிரதேசங்கள் சிலவற்றில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றுத் திகழ்கின்றது. இதை ஒரு மணல் செறிந்த பாலைநிலம் எனலாம். இந்த மணல் காட்டில் இருந்துதான் வன்னி மற்றும் குடாநாட்டுக்குத் தேவையான மணல் பெறப்படுகின்றது. இங்கு கண்ணாடி மணல் இருப்பதாகவும் கனியவியலாளர் கணித்துள்ளனர்.

மணல் காட்டில் சில இடங்களில் சவுக்கு மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை பருவகாலத்தின் போது பலமாக வீசும் மணல் காற்றின் பாதிப்பிலிருந்து அப்பகுதி கிராமங்களை பாதுகாக்கும் பொருட்டு நாட்டப்பட்டன. இப்போது களவாக மரம் வெட்டுபவர்களால் அவை வெட்டப்பட்டு வருகின்றன. மணல் காட்டில் ஆலயம் ஒன்று புதையுண்டிருக்கின்றது.

மணலில் புதையுண்ட இந்த ஆலயம் புனித அந்தோனியார் ஆலயம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆலய சுற்றாடலில் நாணயங்கள், சிலைகள் போன்ற வரலாற்றுச் சின்னங்கள் அகப்பட்டு வருகின்றன. அருகில் உள்ள மண்மேட்டில் கிறிஸ்தவ சேமக்காலை ஒன்று காணப்படுகின்றது. இந்த மண்மேட்டின் காரணமாக அருகிலுள்ள கிராமங்கள் கடற்கோளின் போது காப்பாற்றப்பட்டதாக அறியமுடிந்தது.


இப்பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்வின்போது அகப்பட்ட வல்லிபுரம் செப்பேடு முக்கியமானது. இந்த வல்லிபுரம் செப்பேடு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றார்கள். இச்செப்பேடு தமிழ் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு வல்லிபுரம் செப்பேடு கண்டுபிடிக்கப்பட்ட வடமராட்சியில், பருத்தித்துறைக்கு அண்மையில் மணல் மேடுகள் பொருந்தி இருக்கின்ற வல்லிபுரமே பூர்வகால சிங்கை நகராகும்.

காற்றடித்து அல்லது மழை பெய்து விட்ட பின் வல்லிபுர மணல் மேடுகளில் அநேக பழைய பொருட்கள் வெளிப்படுகின்றன. இங்கே பல இடங்களில் பூர்வகாலக் கலவோடுகள், பெரிய வீதி இருந்ததற்கான அடையாளங்கள் இந்த மணல்காட்டுப் பகுதியில் காணப்படுவதால் இப்பகுதி ஆதிகாலத்தில் மிகப் பிரபலமான நகராக விளங்கியுள்ளது என ஊகிக்க முடிகின்றது. இப்பகுதியில் ஒரு பெரிய துறைமுகம் காணப்பட்டுள்ளதுடன் இங்கிருந்து கப்பல்கள் போக்குவரத்து செய்தன என்றும் இப்பொழுதும் இந்த இடம் கப்பல்துறை என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பேராசிரியர் கணபதிப்பிள்ளை

எழுதிய "இலங்கை வாழ் தமிழர் வரலாறு'' என்னும் நூலில் குறிப்பு காணப்படுகின் றது.

வடமராட்சியில் புலோலிப் பகுதியில் 1700 ஆம் ஆண்டள வில் முதன் முதலாக புனித சூசையப்பர் ஆலயம் கட்டப்பட் டது. வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள புனித செபஸ்தி யார் ஆலயமும் 1700 ஆம் ஆண்டில் கட்டப்பட்டமை குறிப் பிடத்தக்கதாகும். இதேபோல் பருத்தித்துறை நகரிலிருந்து கிழக்கே 500 மீற்றர் தூரத்தில் புனித தோமையார் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இந்தத் தோமையார் ஆலயத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் கரை யோரப் பகுதியில் அமைந்துள் ளது மணற்காடு புனித அந் தோனியார் ஆலயம்.


1894 ஆம் ஆண்டு இந்த ஆலயத்தைக் கட்டுவதற்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக் கப்பட்டு, 1910 ஆம் ஆண்டு அருட்தந்தை ஒலிவ் என்ப வரினால் கட்டிமுடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவ்வாலயம் கடற்கரையிலிருந்து தெற்கே 500 மீற்றர் தூரத்தில் மேற்கு நோக்கிய பெரிய வாசலைக் கொண்டும், சக்கிறிஸ்டி அறையை கிழக்கு நோக்கிய தாகக் கொண்டும் அமையப் பெற்றிருந்தது. ஆனால் தென் மேற் பருவப்பெயர்ச்சிக் காற்றி னால் மணல் வீசப்பட்டு ஆல யம் படிப்படியாக மூடப்படத் தொடங்கியது. அந்த கிராமத் தைச் சுற்றி மணல் குன்றுகள் எழுந்தன. ஆரம்பத்தில் கோவிலை மணல் மூடுவதை தடுப்பதற்காக கற்கள் அடுக்கப் பட்டன. மணல் புயலினால் அடுக்கப்பட்ட கற்களும் மூடப் பட, ஆலயம் உட்பட அருகிலி ருந்த கிராமமே மணலால் மூடப்பட்டது. தற்போது கற்கள் அடுக்கப்பட்ட பகுதியும் ஆல யமும் வெளித்தெரிய ஆரம்பித் துள்ளன. இதற்கான காரணம் லொறிகளில் மணல் எடுத்துச் செல்வதும் சவுக்கு மரங்கள் வளர்க்கப்பட்டமையும் ஆகும்.



புனித அந்தோனியார் ஆலயம் மணலாற் சூழப்பட் டதையடுத்து அதிவணக்கத் துக்குரிய கியோமர் ஆண்டகை மூடப்பட்ட ஆலயத்திற்குப் பதி லாக இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற்கரைக் கிராமத்தில் இன்னொரு ஆல யத்தைக் கட்டுமாறு பணித்தார். இந்தக் கட்டளையை ஏற்று பொதுமக்கள் தமக்குச் சொந்த மான காணியில் 30 பரப்புக் காணியை கோவிலுக்கு தான மாக வழங்கினார்கள். இக் காணி ஆலடி மணற்காடு என அழைக்கப்படுகின்றது.

1923 ஆம் ஆண்டில் புதிய ஆலயத்திற்கு அத்தி வாரம் இடப்பட்டு 1933 ஆம் ஆண்டில் திருவிழா திருப்பலியு டன் ஆரம்பமானது. இந்த ஆல யத்தை அமைப்பதற்கு பருத் தித்துறையிலிருந்து முருகைக் கற்கள், கல், சீமெந்து போன்ற கட்டடப் பொருட்களை வாகன வசதியின்மையால் மீனவர்கள் கடல்வழியாக தமது சிறிய வள்ளங்களில் எடுத்து வந்தி ருந்தார்கள். இந்த ஆலயம் கடல்பார்த்த ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளது.

■




# சுவையின் மறுபெயர் பருத்தித்துறை வடை

பெயர் சொல்லும் பிள்ளை உண்டு. அதென்ன பெயர் சொல்லும் வடை? உங்களுக்குத் தெரிந்த பலகாரங்களின் பெயர்களை ஒருக்கால் நினைத்துப் பாருங்கள். எந்தப்பலகாரமாவது உங்கள் ஊரின் பெயர் சொல்கிறதா? ஆனால் தட்டை வடை என் பெயர் சொல்லப்படும் வடை மட்டும் பருத்துறை வடை என்று ஊரின் பெயர் சொல்லி நிற்கிறது.

சில வகை உணவுப் பொருள்களுக்கு சில ஊர்கள் பிரபலமாக இருப்பதுண்டு தான். ஆனால் எந்த உணவுப்பொருளும் அந்த ஊரின் பெயர் சொல்லி நிற்பதில்லை. பருத்துறை வடை மட்டும் இதில் விதிவிலக்கு. பொறிவிளாங்காய், உழுத்தம் பலகாரம், பகோடா, முறுக்கு என்று வடமராட்சியில் பல விதமான சிற்றுண்டிகள் பெயர் பெற்றிருந்தாலும் தட்டவடை மட்டும் ஊரின் பெயர் சொல்லி நிற்கின்றது. அரைக்கப்படாத உழுந்துடன் ,பெருஞ்சீரகம், மிளகாய்தூள், மா, உப்பு சேர்த்து தயாராகும் பருத்துறை வடை,எவருடைய நாவையும் ஊறவைக்கும் சுவையுடையது.மூன்று தசாப்த கால போரினால் அதிகளவு கவனிப்பாரற்று இருந்த இந்த வடைக்கு , போருக்கு பின்னான இன்றைய சுறுசுறுப்பான யாழ்ப்பாணத்தில் மீண்டும் கிராக்கி அதிகரித்துள்ளது.

"இப்ப தான் நாங்க செய்து கொண்டிருக்கிற பருத்துறை வடையால வருமான் அதிகம் கிடைக்குது. முன்பு இதிலை அதிக ஆதாயம் கிடைக்கேல்லை. ஏ9 பாதை திறந்த பிறகு



வெளிநாட்டால் வருபவர்களும், கொழும்பு மற்றும் ஏனைய இடத்தில் இருந்து வாறவையும் நிறையத்தேடி வருகினம். இதாலை இப்ப வருமான் கூடியிருக்குது" என்று மகிழ்கிறார் பருத்துறை வடை சுட்டு விற்று வரும் பருத்துறையைச் சேர்ந்த க.ரதி என்ற பெண்மணி. 1987ம் ஆண்டு லிபறேசன் ஒப்பிரேசன் இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே இவர் இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்.

பக்கற் செய்தே இந்த வடைகள் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன. பைக்கற் ஒன்றில் 15 வடைகள் போட்டு 45 ரூபாவுக்கு கொடுக்கின்றார்கள். கடைகளில் அவை 50-60 ரூபா வரையில் விற்பனையாகிறது. திருமண வைபவங்கள் மற்றும் ஏனைய விஸேசங்கள் எனின், 100 வடை 150 ரூபாவுக்கு விற்று கொடுக்கின்றார்கள். "ஒரு நாளைக்கு குறைந்தது 1 கிலோ உழுந்திலாவது வடை சுடுவம். இதில 400 வடை கிடைக்கும். ஒரு நாளைக்கு1200 ரூபா வரையில் கிடைக்குது. 900 ரூபா செலவு போக 300 ரூபா மிஞ்சும்" என்கிறார் அந்த பெண்மணி.
இது வடையின் கதை. இந்த வடையை சுட்டு சீவிக்கும் ரதிக்கு தனிக்கதை இருக்குதென்பது அவரோடு பேச்சுக் கொடுத்த போது தெரிந்தது.

"வடைவித்து வாற 300 ரூபாவை கொண்டு தான் நாங்கள் சீவியம் நடாத்துகிறம். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு. கணவர் பிள்ளைகள் பிறந்தவுடனேயே என்னைத் தனியே விட்டுப் போய் வேற திருமணம் செய்து விட்டார்" என்று தனது சோகக் கதையை கூற ஆரம்பித்தார்.

"ஆரம்பத்தில் ரொம்பக் கஸ்ரப்பட்டன். இப்பதான் இந்த தொழில் மூலம் ஓரளவு நிம்மதி கிடைச்சிருக்கு. 9ம் ஆண்டும் 7ம் ஆண்டும் படிக்கும் என்ர பிள்ளையளுடைய படிப்பு மட்டுமில்லை, என்ர அம்மா, தங்கைமார் மூன்று பேரும் என்னோடதான் இருக்கினம். நாங்கள் எல்லோருஞ் சேர்ந்து தான் இந்தத் தொழிலை செய்யிறம்" என்று முடித்தார். 48 வயதாகும் இந்தப் பெண்மணி, 8 வயதிலேயே தன் தந்தையாரை இழந்து, தாயின் அரவணைப்பிலேயே வளர்த்துள்ளார். மந்திகை வைத்தியசாலையில் வேலை செய்து தமது தாயார் தன்னையும், தன்னுடைய ஏனைய 6 சகோதரர்களையும் வளர்த்ததாகப் பழைய நினைவுகளையும் பகிர்கின்றார் அவர். வீட்டில் மூத்த பிள்ளையாகப் பிறந்த ரதி, குடும்பச் சுமைகள் காரணமாகப் பாடசாலை செல்லவில்லை. இப்போது கணவராலும் கைவிடப்பட்டு, தனது தாயையும், மூன்று சகோதரிகளையும் வைத்துப் பராமரிப்பதற்கு அவருக்குக் கைகொடுப்பது இந்தப் பருத்துறை வடைதான்.

'பெயர் சொல்லும் வடை' இவர்களின் வாழ்வையும் உயரத்துக்கு இட்டுச் செல்லட்டும்.



ஐஸ்வர்யா

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

Media Resources & Training centre , University of Jaffna

# இதழியல் டிப்ளோமா

முழுநேரம் - (இரண்டு ஆண்டுகள்)

# கல்வியாண்டு – 2013/2014

# Diploma in Journalism - 2013/2014

## புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான. 2013/2014 ஆண்டுக்கான. புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)



**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

1. செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
2. றேடியோ மற்றும் ரி.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
3. ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
4. சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
5. ஆவணப்பட தயாரிப்பு
6. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல. 84 ஜும்மா பள்ளி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**அனுமதிக்கான தெரிவுமுறை**

1. எழுத்துத்தேர்வு (எழுத்தாற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
2. நேர்முகத்தேர்வு

**கற்கைக் காலம் – 2 ஆண்டுகள் (முழுநேரம்)**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி-20.08.2013**



**கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. | 1000.00 |
| மொத்தம் | ரூ | 22,500.00 |

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்**

**021 2229873**

**பதிவாளர்**

*Print By - Noble Printers.*